முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர், வேலூர் மாவட்டம்

**ஐ.டி.எண். 61/2025 05.08.2026**

**நி.த.சாட்சி – 1 திரு.செந்தில்குமார்**

**குறுக்கு விசாரணை**

TN 32 N 8854 என்ற வாகனம் விழுப்புரம் டிப்போவில் இருந்து எப்பொழுது வெளியே எடுக்கப்பட்டது என்றால் காலை 06.30 மணிக்கு. வண்டி சேலம் நோக்கி சென்றது. சேலத்திற்கு எத்தனை மணிக்கு வண்டி சென்றது என்றால் அதை குறித்த விபரம் இல்லை. சேலத்தில் இருந்து வண்டி வந்த பொழுது விபத்து ஏற்பட்டுள்ளது அந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை கோப்புகளின் அடிப்படையில் தான் நான் சாட்சி அளிக்கிறேன். விழுப்புரம் ஆட்சியர் கொடுத்த நேர கால அட்டவணைப்படி அந்த பேருந்து இயக்கப்பட்டுள்ளதா என்றால் அந்த விபரங்கள் கோப்புகளில் இல்லை. முதல் கட்டப் பணிக்கும் இரண்டாம் கட்ட பணிக்கும் ஓட்டுனர் பெயர் பழனிக்கு எவ்வளவு ஓய்வு கொடுக்கப்பட்டது என்றால் அதை பற்றிய விபரம் எனக்கு தெரியாது. ஜெயபழனி ஓட்டிய வண்டி 65 கிலோ மீட்டர் வேகத்தில் ஓட்டக் கூடியது நான் சொல்வது தவறு என்றும் நீங்க என்ன அரசு நிர்ணயம் செய்த வேகத்தடை 60 தான் என்று சொன்னால் 60 முதல் 65. சம்பவம் நடந்த இடத்தில் 65 கிலோ மீட்டர் ஸ்பீடில் ஓட்ட வாய்ப்பு இல்லை என்றும் அதில் இரண்டு ஸ்பீட் பிரேக்கர்கள் உள்ளன என்றும் 15 கிலோமீட்டர் ஸ்பீட்க்கு மேல் ஓட்டை இருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. 14 ஆவது ஊதியக்குழு ஒப்பந்தத்தில் தண்டனைகள் குறித்து குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் பழைய செட்டில்மெண்ட் ஓவர் ரூள் செய்யும் பொழுது தான் புதிய செட்டில்மெண்டில் அது சொல்லப்படும் இல்லையென்றால் பழைய செட்டில்மெண்டில் உள்ளதை தொடரும். 1992 ஆம் வருட ஒப்பந்தம் நோட்டீஸ் போர்டில் ஒட்டப்பட்டதா என்றால் அந்த காலகட்டத்தில் ஒட்டப்பட்டது. புதிதாக வந்த தொழிலாளர்களுக்கு அந்த ஒப்பந்தம் கொடுக்கப்பட்டதா என்றால் தொழிற்சங்கங்களுக்கு தெரியும்.1992 ஆம் வருடத்தை ஒப்பந்த ஆவணத்தை என்னால் ஆஜர் படுத்த இயலும். எட்டு மணி நேரம் வேலை பார்க்க வேண்டிய ஓட்டுநரை 18 மணி நேரம் வேலை

பார்க்க வைத்த காரணத்தினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அவர்களுக்கு ரெஸ்ட் எடுப்பதற்கு டைம் கொடுக்கப்பட்டுள்ளது அவ்வாறு டைம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிராமத்திற்கு ஓட்டம் வண்டியை சென்னை மற்றும் சேலத்துக்கு ஓட்டுகிறோம் என்று சொன்னால் சரியல்ல. அவர்தான் வண்டிகள் ஓட்டப்படுகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. ஆக்சிடென்ட் விங் எதற்காக எடுக்கப்பட்டது என்றால் ஆல் பற்றாக்குறை காரணமாக எடுக்கப்பட்டது. புதிதாக ஆள் போடுவது அரசின் கொள்கை முடிவு. அரசின் வழிகாட்டுதலின்படி நிர்வாகம் செயல்படுகிறது. ஆக்சிடென்ட் விங் நிறுத்தப்பட்டது குறித்து அரசாங்கத்திடம் தெரியப்படுத்தப்பட்டதா என்றால் அலுவலகத்தில் கேட்டு தான் சொல்ல இயலும். அரசுக்கு தெரியப்படுத்தியிருந்தால் அதற்குண்டான ஆவணங்களை ஆசைப்படுத்த இயலுமா என்றால் விபத்திற்காக ஒவ்வொரு வருடமும் அரசாங்கம் எவ்வளவு நஷ்ட ஈடு கொடுக்கிறது என்றால் அரசு பணம் கொடுத்து உள்ளது ஆனால் எத்தனை கோடி என்று எனக்கு தெரியாது. வண்டியின் மீது மோதிய இருசக்கர வாகனம் குடிபோதையில் ஓட்டுநர் இருந்த காரணத்தினால் பேருந்தின் மீது வண்டியை மோதினார் என்று சொன்னால் சரி அல்ல. பேருந்துக்கு இன்சூரன்ஸ் போட்டு இருந்தால் இந்த விபரங்கள் வெளிவரும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

PACKIAJOTHI Digitally signed by PACKIAJOTHI Date: 2026.08.05 14:19:39 +0530

Presiding Officer